DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.1

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.நாகராஜ் | Caste | : |
| Father's /Husband's Name | : முருகன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 6th day of February, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது செங்குன்றாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலை பார்த்து வருகிறேன். என் உடன் பிறந்தவர்கள் 4 பேர். எனது அக்கா முருகேஷ்வரி, அண்ணன்கள் செல்வகணேஷ் மற்றும் வீரகணேஷ் ஆகியோர்கள். நாங்கள் அனைவரும் என் அம்மா, அப்பாவுடன் இருந்து வருகிறோம். வழக்கில் இறந்துபோனவர் என் அண்ணன் செல்வகணேஷ். ஆஜர் எதிரியை தெரியும். என்அண்ணன் செல்வகணேசுக்கும், வத்ராப் புதுப்பட்டியை சேர்ந்த நீராறு மகள் பாண்டீஸ்வரிக்கும் 13.10.2021ம் தேதி நிச்சயம் செய்திருந்தார்கள். கடந்த 03.11.2021ம் தேதி என்அண்ணன் செல்வகணேஷ், பாண்டீஸ்வரி வீட்டிற்கு செல்வதாக கூறிவிட்டு சென்றார். பின்னர் 06.11.2021ம் தேதி

எனதுஅண்ணன், மேற்படி பாண்டீஸ்வரி, அவரது பெற்றோர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். சிறிது நேரம் எங்கள் வீட்டில் இருந்துவிட்டு என் அண்ணன், பாண்டீஸ்வரி மற்றும் அவரது பெற்றோருடன் வத்ராப் புதுப்பட்டிக்கு சென்றுவருவதாக சொல்லிவிட்டு சென்றுவிட்டார். 07.11.2021ம் தேதி என் அண்ணன் செல்வகணேஷ் என் அம்மாவுக்கு போன் செய்து சாயங்காலம் வீட்டிற்கு வருவதாக சொன்னார். சாயங்காலமும் என் அண்ணன் செல்வகணேஷ் வீட்டிற்கு வரவில்லை. நாங்கள் பக்கத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று இருந்துவிட்டோம். பின்னர் நான் என் அண்ணன் செல்வகணேசுக்கு போன் செய்து பார்த்தபோது போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. அதன்பின்னர் பாண்டீஸ்வரி என் அம்மாவுக்கு போன் செய்து செல்வகணேஷ் வந்துவிட்டாரா இல்லையா என்றும்,அவரது போன் சுவிட்ச் ஆப்பாக உள்ளது என்றும் சொன்னார். திரும்பவும் மறுநாள் 08.11.2021ம்தேதி என் அண்ணன் செல்வகணேசுக்கு போன் செய்து பார்த்தபோது போன் சுவிட்ச் ஆப்-ல் தான் இருந்தது. எனக்கு பெரியம்மா மகன் மோகன்ராஜ் என்பவர் கோட்டையம்மன்கோவில் அருகில் ஊரணிகரையில் எனது அண்ணன் கொலைசெய்யப்பட்டு எரிக்கப்பட்டு கிடப்பதாக எனக்கு தகவல் சொன்னார். பின்னர் நான் போய் பார்த்தபோது ஊரணிக்கரையில் என் அண்ணன் இறந்து கிடந்தார். அவர் மேல் வண்டி கிடந்தது. அவருடைய வலது பக்கம் முழுவதும் எரிந்துகிடந்தது. முன்தலையில் ஒருகாயமும், பின்தலையில் இரண்டு காயமும்இருந்தது. என் அண்ணன் இறந்துகிடந்த இடத்திலே அவர் ஓட்டிச்சென்ற TN 67 BJ 3135 என்ற bajaj வண்டி கிடந்தது. அதன்பின்னர் நான் காவல்துறைக்கு தகவல் சொன்னேன். புகார் நான் தான் கொடுத்தேன். அந்த புகாரை என் அண்ணன் சதீஷ்குமார் எழுதினார். என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான்கொடுத்தது.

அது <u>அ.த.சா.ஆ.1</u> ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தான் என் அண்ணன் ஓட்டிச்சென்ற இருசக்கரவாகனம். <u>TN 67 BJ 3135 என்ற bajaj இருசக்கர வாகனம் சா.பொ.1</u> ஆகும். என் மாமா நாடக தன்னாசி எதிரியும், இறந்துபோன என்அண்ணனும் குமுளங்குளம் விலக்கு அருகே வண்டியில் ஒன்றாக சென்றதாகவும், அதை அவர் பார்த்ததாகவும் சொன்னார். என் அண்ணனை ஆஜர் எதிரி மாரிமுத்து கொலை செய்யததாக தெரிந்துகொண்டேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

புகார் கொடுக்கும் போதும், போலீஸார் விசாரணையிலும் என் அண்ணன் செல்வகணேசனின் செல்போன் நம்பர் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மறுநாள் காலை வரை ஆஜர் எதிரி செல்வகணேசுடன் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். என் மாமா நாடக தன்னாசி காலை 09.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே எம்.புதுப்பட்டி போலீஸார் அங்கு இருந்தார்கள். என்னையும், என் மாமா நாடக தன்னாசியையும் போலீஸார் அங்கு வைத்து விசாரித்தார்கள். அப்போதும் என் மாமா ஆஜர் எதிரி, செல்வகணேசுடன் வந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க நான், என் அண்ணன் சதீஷ்குமார், நாடக தன்னாசி ஆகியோர்கள் சென்றோம். நாங்கள் எல்லோரும் கலந்து பேசி தான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். விருதுநகர் அரசு மருத்துவமனையில் என் அண்ணன் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்யும் போதும் என் மாமா நாடக தன்னாசி உடன் இருந்தார் என்றால் சரிதான். விருதுநகர் அரசு மருத்துவமனையில் வைத்தும் என்னையும், என் அம்மா, அப்பா, அக்கா, என் மாமா நாடக தன்னாசி ஆகியோர்களை போலீஸார் விசாரித்தார்கள் என்றால்

சரிதான். அப்போதும் என் மாமா நாடக தன்னாசி, எதிரி, செல்வகணேசுடன் ஒன்றாக வாகனத்தில் சென்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். என் மாமா நாடக தன்னாசி உண்மையிலேயே எதிரி, செல்வகணேசுடன் ஒன்றாக வாகனத்தில் சென்றதை பார்த்திருந்தால் அவர் போலீஸார் விசாரணை, பிரேத விசாரணையின் போதும் சொல்லியிருப்பார் என்றும், அவர் அவ்வாறு எதுவும் பார்க்காததால் தான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலீஸார் விசாரணையின் போது வண்டியில் என் அண்ணன் செல்வகணேஷ் எதிரியின் பின்னால் உட்கார்ந்து எங்கள் ஊருக்கு கிளம்பி சென்றதாக கேள்விபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.2

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.கற்பகவள்ளி | Caste | : |
| Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 6th day of February, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது செங்குன்றத்தில் வசித்து வருகிறேன். என் கணவர் பெயர் முருகன். எனக்கு மொத்தம் 4 குழந்தைகள். வழக்கில் இறந்துபோன செல்வகணேஷ் என் இரண்டாவது மகன். ஆஜர் எதிரியை தெரியும். என் மகன் செல்வகணேசுக்கும், வத்ராப் புதுப்பட்டியை சேர்ந்த நீராறு மகள் பாண்டீஸ்வரிக்கும் 13.10.2021ம் தேதி நிச்சயம் செய்திருந்தோம். தீபாவளி சமயத்தில் என் மகன் செல்வகணேஷ் பாண்டீஸ்வரி வீட்டிற்கு சென்றிருந்தார். திரும்பவும் 2 நாட்கள் கழித்து பாண்டீஸ்வரி அவரது பெற்றோர்கள் மற்றும் என் மகன் ஆகியோர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். சிறிது நேரம்வீட்டில் இருந்துவிட்டு என் மகன், பாண்டீஸ்வரி மற்றும் குடும்பத்தாருடன் பாண்டீஸ்வரியின் வீட்டிற்கு சென்றான். மறுநாள் காலை என் மகன் என் மகன் செல்வகணேஷ் எனக்கு போன் செய்து வீட்டிற்கு

வருவதாக சொன்னார். என் மகன் வீட்டிற்கு வரவில்லை. பின்னர் பாண்டீஸ்வரி எனக்கு 7 மணியளவில் போன் செய்து செல்வகணேஷ் வீட்டிற்கு வந்துவிட்டாரா என்று கேட்டார், அதற்கு நான் வரவில்லை என்று சொன்னார். நாங்கள் என் மகனை தேடிப்பார்த்தோம். மறுநாள் திங்கள்கிழமை என் மகன் நாகராஜ் எனக்கு போன் செய்து செல்வகணேஷ் கோட்டையம்மன்கோவில் அருகே இறந்துகிடப்பதாக தகவல் சொன்னார். நானும், என் கணவரும் அங்கு சென்று பார்த்தோம். வழக்கில் என் மகன் நாகராஜ் புகார் கொடுத்தார். எனது மகனை ஆஜர் எதிரி அடித்து கொன்றுவிட்டதாக தெரிந்து கொண்டேன். நாடக தன்னாசி என்மகன் நாகராஜிடம், என் மகன் செல்வகணேசும் எதிரியும் ஒன்றாக பைக்கில் போனதை பார்த்ததாக சொல்லி நாகராஜ் என்னிடம் சொன்னார். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நாங்கள் சம்பவ இடத்திற்கும் செல்லும்போது அங்கு போலீஸார்கள் இருந்தார்கள். நாங்கள் தகவல் சொன்னவுடன் என்மகளும், மருமகன் நாடக தன்னாசியும் காலை 08.30 மணிக்கு வந்துவிட்டார்கள். அங்கு வைத்து போலீஸார் என்னை, என் மகன், மருமகன், மகளை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் நாங்கள் விவரங்களை சொன்னோம். சம்பவ இடத்திற்கு வந்த உடனேயே நாடக தன்னாசி என்மகன் நாகராஜிடம், என் மகன் செல்வகணேசும் எதிரியும் ஒன்றாக பைக்கில் போனதை பார்த்ததாக சொன்னார் என்றால் சரிதான். அதன்பிறகு தான் என் மகன் நாகராஜ், சதீஷ்குமார், நாடகதன்னாசி எம்.புதுப்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து போலீஸார் விசாரித்து எழுதிக்கொண்டு என்னிடமோ, என் மகனிடமோ கையெழுத்து

வாங்கவில்லை. விருதுநகர் அரசு மருத்துவமனையிலும் போலீஸார் என்னை, என் கணவரை, மருமகன் நாடக தன்னாசி, மகளை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மருத்துவமனையில் விசாரிக்கும் போதும் எங்களுக்கு தெரிந்த விவரங்களை போலீஸாரிடம் சொன்னோம். என்மருமகன் நாடக தன்னாசி உண்மையிலேயே எதிரி, செல்வகணேசுடன் ஒன்றாக வாகனத்தில் சென்றதை பார்த்திருந்தால் அவர் போலீஸார் விசாரணை, பிரேத விசாரணையின் போதும் சொல்லியிருப்பார் என்றும், அவ்வாறு சொல்லாததற்கு காரணம் அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் மகன் இறப்பிற்கும் எதிரிக்கும் எந்த வகையிலும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலீஸார் சொல்லிக் கொடுத்து அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>